## 1 இந்திரன்பழி தீர்த்த படலம்

தேவலோகத்தில் இந்திரன் தேவமாந்தர்களின் ஆடலிலும் பாடலிலும் களித்திருக்கும் சமயம் உலகின் குருவான பிரகஸ்பதி அங்கு வந்தார். அவரை கவனிக்காமல் அவமதித்ததினால் இந்திரனின் செல்வாக்கு குறைந்தது. எங்கு தேடியும் தன் குரு கிடைக்காததால் இந்திரன் ப்ரம்மாவிடம் சரண்டைந்து நடந்தவற்றைக் கூறி தனக்கு ஓர் வழிக்காட்ட வேண்டினான். இந்திரனும் ப்ரம்மாவின் ஆலோசனைப்படி பிரகஸ்பதி கிடைக்கும் வரை அரக்கன் துவஷ்டா என்பவரின் மகனான விஸ்வரூபனை தேவர்களின் குருவாகக் கொண்டான். அவன் அறிவும் ஒழுக்கமும் நிறைந்த மூன்று தலைகளைக் கொண்டவன்.

பிரகஸ்பதியை சமாதனம் செய்ய இந்திரன் யாகம் செய்ய தீர்மானத்தான். ஆனால் துவக்ஷ்டா அரக்கர் குலத்தைச் சேர்ந்தவர் என்பதால் விஸ்வரூபன் அரக்கர்கள் வாழ்வதற்கு ஏற்றவாறு மந்திரத்தினை மாற்றி யாகம் செய்தார் . இதனை தன் ஞான திருஷ்டியால் அறிந்த இந்திரன் விஸ்வரூபனை வஜ்ராயுதத்தால் தாக்கி அவனை அழித்தான் .இந்திரனுக்கு ப்ரம்மஹஸ்தி பாபம் பற்றிக்கொண்டது. இந்திரனின் பாபத்தைப் போக்க எண்ணம் கொண்ட தேவர்கள் அதனை பெண்களுக்கு பூப்பாகவும், மரத்தில் பிசினாகவும், தண்ணீருக்குள் நுரையாகவும், மண்ணில் உவர்ப்பாகவும் கழியும் படி செய்தனர்.

கோபம் கொண்ட விஸ்வரூபனின் தந்தையான துவஷ்டா யாகம் ஒன்றினை செய்து இந்திரனை அழிக்க விருதிகாசுரன் என்ற ஒரு அரக்கனை உருவாக்கினார். இருவருக்கும் கடுமையான போர் நடந்து. அதில் தோற்ற இந்திரன் மீண்டும் ப்ரம்மனிடன் தஞ்சம் புகுந்தான். ப்ரம்மா அவனை விக்ஷ்ணு பகவானிடம் அழைத்துச் சென்றார். விஷ்ணுவும் இதற்கொரு உபாயம் கூறினார். திருப்பாற் கடலைக் கடையும் சமயம் தேவர்களும் அசுரர்களும் தங்களின் ஆயுதங்களை ததீசி என்ற முனிவரிடம்ஒப்படைத்து விட்டு சென்றனர். ஆனால் அவற்றை யாரும் வந்து கேட்காத்தால் அவர் ஆயுதங்கள் அனைத்தையும் விழுங்கி விட்டார் .அவை அனைத்தும் ஒன்று சேர்ந்து அவரது முதுகு தண்டாக பொருந்தி விட்டது. விஷ்ணு பகவான் அதனக் கொண்டு விருத்திகாசுரனை கொல்ல ஓர் உபாயம் கூறினார் .இந்திரனும் அதனை ததீசி முனிவரிடம் வேண்ட, அவனுக்கு உதவ எண்ணம் கொண்ட முனி, சிவபெருமானை தவம் செய்து சிவலோகம் அடைந்தார். அவரது முதுகு தண்டில் விஸ்வகர்மா வஞ்சிராயுதம் செய்துக் கொடுத்தார். இதனைக் கொண்டு இந்திரன்அசுரனைத் தாக்க, அவன் கடலில் ஒளிந்துக் ண்டான். மீண்டும் இந்திரன் ப்ரம்மாவிடம் தஞ்சம் புகுந்தான். ப்ரம்மா இம்முறை

அகத்தியரிடம் அழைத்துச் சென்றார் . அகத்திய முனி கடலை உளுந்தளவு சிறியதாக்கி குடித்து விட்டார் . இப்போது வெளிப்பட்ட அரக்கன் விஸ்வரூபனை இந்திரன் வஞ்சிராயுதத்தால் தலையில் தாக்கி அழித்தான். இந்திரக்கு மீண்டும் ப்ரம்மஹத்தி தோஹம் பற்றிக்கொண்டது. அத்தோஷத்தால் துன்புற்ற இந்திர ன் தாமரைத் தண்டில் ஒளிந்துக்கொண்டான். அரசன் இல்லாமல் தேவலோகம் நலிவுற்றது .இந்நிலையில் நகுடன் என்ற அரசன் அஸ்வமேத யாகம் செய்து இந்திர பதவியை அடைந்தான். நகுடன் இந்திராணியை அழைக்க அவள் பிரகஸ்பதியை சரண் அடைந்து தன்னை காக்கும் படி பிரகஸ்பதியும் அவனை பாம்பாக்கி விண்ணினின்று மண்ணில் விழச் செய்தார்.

மீண்டும் தேவலோகம் அரசனின்றி களையிழந்தது. தேவர்கள் பிரகஸ்பதி யை தங்களை இந்நிலையிலிருந்துக் காக்க வேண்டினர். பிரகஸ்பதியும் இந் திரனின் தோஷம் நீக்கி தேவர்களைக் காக்க எண்ணம் கொண்டார். இந்திரனை லோகம் அழைத்து
வந்து கடம்ப வனத்தில் ஒரு லிங்கத்தினையும், குளத்தினையும் காட்டினார். அந்தக் குளத்தில் குளித்து, லிங்கத்திற்கு பூஜை செய்யும் படி கூறினார். இந்திரன் அங்கு பூஜை செய்ய மலர் கிடைக்காததால் வருந்தினான். இறைவன் அருளால் குளத்தில் பொற்றாமரை மலர்கள் மலர்ந்தன. அம்மலர்களைக் கொண்டு பூஜை செய்ய அவனுடைய பிரம்மஹத்தி தோஷம் நீங்கியது
விஸ்வகர்மா மூலம் அவ்விடத்தில் லிங்கத்திற்கு எட்டு யானைகள் தாங்கும் மானத்தினை உருவாக்கினான். இந்திரனும், இந்திரானியும், தேவர்களும் இறைவனை வழிபட்டனர். இந்திரன் மனமாற ஈசனை பூஜித்து இந்திர லோகம் அடைந்தான்.

**பல்லவி**

குருவை அவமதித்து அழிந்து சரணடைந்த
அமரேசனைஆட்கொண்டசிவனேசரணம்

**அனுபல்லவி**

கருத்தில் கபடங் கொண்ட விஸ்வரூபனை வீழ்த்தியப் பின்
விருத்திகாசுரனையும் கொன்ற பாபம் தீர்த்தவனே

**பல்லவி**

அகத்தியமுனி கொண்டு அசுரனைக் காணச் செய்தாய்
அடியார் ததீசியிடம் ஆயுதம் பெறச் செய்தாய்
ககனத்தினின்று நகுடனை வீழச் செய்தாய்
கடம்பவன பூஜைக்கு கனககமலம் தந்தாய்